## 2 ஆண்டுகளுக்கு பிறகு நடக்கிறது

# 45 கல்லூரிகள் பங்கேற்கும் பெர்ட்ராம் விளையாட்டு

## சென்னையில் நாளை தொடக்கம்

சென்னை, ஆக. 14—

லயோலா கல்லூரி சார்பில் கல்லூரிகள் இடையேயான பெர்ட்ராம் விளையாட்டு போட்டி சென்னையில் ஆண்டு தோறும் நடத்தப்பட்டு வருகிறது. கொரோனா பாதிப்பு காரணமாக கடந்த 2 ஆண்டுகள் இந்த போட்டி நடைபெறவில்லை.

### பெர்ட்ராம் விளையாட்டு

இந்த நிலையில் 88— வது கல்லூரிகள் இடையேயான பெர்ட்ராம் விளையாட்டு போட்டி தென் இந்திய லயோலா கல்லூரியில் நாளை ( 15— ந் தேதி ) தொடங்குகிறது. செப்டம்பர் 2 வரை இந்த போட்டி நடைபெறுகிறது .

இதில் லயோலா, எம்.சி.சி. பனிமலர் என்ஜினீயரிங் கல்லூரி, ஜமால் முகமது (திருச்சி), காருண்யா (கோவை) உள்பட 45 கல்லூரிகள் கலந்து கொள்கின்றன. கேரளாவில் இருந்தும் சில கல்லூரிகள் பங்கேற்கின்றன.

### 8 போட்டிகள்

கைப்பந்து , கூடைப்பந்து, டென்னிஸ், டேபிள் டென்னிஸ், பால் பேட்மின்டன் , செஸ் , கோ—கோ மற்றும் கபடி ஆகிய 8 விளையாட்டுகள் நடத்தப்படுகிறது.

இந்த போட்டியின் மொத்த பரிசு தொகை ரூ.2 லட்சமாகும். கடந்த காலத்தை விட தற்போது பரிசு தொகை ரூ.50 ஆயிரம் உயர்த்தப்பட்டுள்ளது.